21/8/11 - MALAYSIA NANBAN.

# புகுமுக வகுப்பு குறித்த ஆய்வு



(எஸ்.ஜீவராஜா–அ.செல்வகணபதி)

கோலாலம்பூர், ஆக.21–

தற்போது மலேசியாவில் கல்வித் தரம் மேம்பாடு அடைந்து வரும் வேளையில், இடைநிலைப்பள்ளிகளில் செயல்பட்டு வரும் புகுமுக வகுப்புகளின் அவசியம் குறித்த ஆய்வு ஒன்றை நடத்தப் போவதாக EWRF எனப்படும் கல்வி சமூக ஆய்வு அறவாரியத் தலைவர் டத்தோ யோகேஸ்வரன் தெரிவித்தார்.

ஆரம்பப் பள்ளியில் யூபிஎஸ்ஆர் தேர்வில் சிறந்த மதிப் பெண்களைப் பெறாத மாணவர்கள் இடைநிலைப் பள்ளிகளில் புகுமுக வகுப்புகளில். புகுவது எவ்வகையில் சாத்தியம் என்பதை இந்த ஆய்வின் வழி தெளிவுபடுத்த முடியும் என அவர் கூறினார்.

கல்வி சமூக ஆய்வு அறவாரியத்தின் ஆய்வியல் பிரிவின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வை மஇகா தலைமைச் செயலாளரும் சுபாங் நாடாளுமன்ற ஒருங்கிணைப்பாளருமான எஸ். முருகேசன் தொடக்கி வைத்தார்.

ஆரம்பப் பள்ளிகளிலிருந்து புகுமுக வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்களின் மனதில் எழும் கேள்விகளுக்கு பதில் அளிக்கும் வகையில் அமைந்த இந்த ஆய்வில் முன்று அம்சங்களைக் கொண்டு முழுமையான விவரங்கள் விவரிக்கப் படவுள்ளதாக ஏற்பாட்டாளர்களில் ஒருவரான சாந்தி கூறினார்.

உண்மையான நோக்கம், இப்புகுமுக வகுப்பினால் மாணவர்களுக்கு ஏற்பட கூடிய விளைவுகள், புகுமுக வகுப்புகள் தொடர்ந்து நடத்தப் பட வேண்டும் அல்லது தேவை இல்லையா என்பதை தெளிவு படுத்துவதற்கு இந்த ஆய்வு வழி செய்யும் என அவர் குறிப்பிட்டார்.

தலைநகரில் பிரபல தங்கும் விடுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்நிகழ்வில் சுமார் 50க்கும் மேற்பட்ட சீன தமிழ்ப் பள்ளியைச் சேர்ந்த மாணவர்களும் ஆசிரியர்களும் திரளாகக் கலந்து தங்களின் கருத்துகளைப் பகிர்ந்து கொண்ட இந்த ஆய்வின் மூலம் கிடைக்கப் பெற்ற தகவவல்களைக் கொண்டு மகஜராக தயாரித்து கல்வி அமைச்சிடம் வழங்கவிருப்பதாக அவர் சொன்னார்.